**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED ON 26.09.2025 FOR THE PROPOSED EXPANSION OF SALEABLE CASTING PRODUCTS FROM 27500 TPA TO 95040 TPA WITHIN EXISTING PLOT AREA AT M/S. BAETTR INDIA PRIVATE LIMITED, LOCATED AT S.F.NO.32/2, PLOT NO. A-3/1, SIPCOT INDUSTRIAL PARK, THERVOY KANDIGAI VILLAGE, GUMMIDIPOONDI TALUK, TIRUVALLUR DISTRICT, TAMILNADU.**

**Name of the Project:** PROPOSED EXPANSION OF SALEABLE CASTING PRODUCTS FROM 27500 TPA TO 95040 TPA WITHIN EXISTING PLOT AREA BY M/s. **BAETTR INDIA PRIVATE LIMITED, LOCATED AT S.F.NO.32/2, PLOT NO. A-3/1, SIPCOT INDUSTRIAL PARK, THERVOY KANDIGAI VILLAGE, GUMMIDIPOONDI TALUK, TIRUVALLUR DISTRICT** as per the Section 2(i) and (ii) of the Environmental Impact Assessment Notification, 2006.

**Venue:** Community Hall – Sengarai Village, Uthukottai Taluk, Tiruvallur District - 601101.

**Date & Time:** 26.09.2025 - 11.00 A.M.

**Presiding Officers:**

1. Thiru. C. Suresh,
   District Revenue Officer,
   Tiruvallur District, Tamilnadu.

2. Er. G.Gajalakshmi, M.Tech., M.B.A.,
   District Environmental Engineer,
   Tamilnadu Pollution Control Board,
   Gummidipoondi,
   Tiruvallur District, Tamilnadu.

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Gummidipoondi welcomed the District Revenue Officer, Thiruvallur District, Officials, Public, NGO's and Project Proponent who have attended the Public Hearing and informed that M/s. Baettr India Private Limited, located at SIPCOT Industrial Park, Thervoy Kandigai Village, Gummidipoondi Taluk, Tiruvallur District has Proposed to Expand its production of Saleable

Casting products from 27500 TPA to 95040 TPA within Existing Plot Area which requires prior Environmental Clearance from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF & CC), Government of India (GOI), under Environmental Impact Assessment Notification, 2006.

Based on it, Environment Impact Assessment report was prepared by the unit as per the Terms of Reference (TOR) issued by the Environment Impact Assessment committee and published public notice as mandated regarding conducting of public hearing in the two newspapers namely "The New Indian Express (Tamilnadu)" & "Dinakaran (Chennai)" on 22.08.2025 and accordingly today 26.09.2025 public hearing has been arranged.

On behalf of the unit of M/s. Baettr India Private Limited, the Environmental Consultant has made power point presentation about the proposed Expansion activity of the project that is increase of Saleable casting products from 27500 TPA to 95040 TPA within the existing plot area. In line with this, the Industrial sheds and other buildings are proposed to be expanded from 18,471.8 sq.m to 46,451.1 sq.m. Further highlighted the outcomes of the baseline studies and detailed the anticipated benefits and advantages of the proposed expansion project.

Following the presentation, the public were invited to express their views, concerns and questions if any by indicating their name and village name from where he/she belongs to.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

**The views and the opinion of the public are as given below:**

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| 1 | **Mrs. Deivanila, Thervoy Kandigai Village** | • As employment opportunities are available close to my village, significant commuting time is saved. With only 8 hours of working per day in this company, I am able to plan and utilize my time effectively for the development and upbringing of my children.<br>• The company provides strong support through attractive salaries and ensures two- or three-times food facilities to the employees during office working hours in a day. |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | • The company operates with all safety and environmental regulations stipulated by the government from time to time.<br>• I am confident that the company will continue to provide more employment opportunities for the local village people, thereby contributing to the socio-economic development of the community.<br>• Requested the Ministry of Environment, Forest and Climate Change (MoEFCC) to grant Environmental Clearance for this project. |
| 2 | **Mrs. Bharathi, Thervoy Kandigai Village** | • Due to my husband's poor health, he is unable to work. The employment opportunity provided to me in this company has enabled us to manage our family effectively.<br>• With the fair salary provided, I am able to meet household expenses, cover my husband's medical treatment costs, and provide uninterrupted education to my four children.<br>• The presence of this company has not caused any issues for the villagers; on the contrary, it has improved our quality of life.<br>• I am hopeful that my children will also be employed here in the future. |
| 3 | **Mr. Thirumurugan, Thervoy Kandigai Village** | • Earlier, while working in Gummidipoondi, I had to leave home at morning 5:00 a.m., and could return home only by 7:00–8:00 p.m., which made it difficult to spend time with my family.<br>• At present, working in my own village with an 8-hour shift has brought job satisfaction and happiness to me.<br>• Since I own 25 cents of land, I am able to engage in agriculture after work hours and utilize the produce and earn additional income for my family.<br>• The company provides stable income, daily meal facilities, and immediate medical attention in case of health issues at the workplace for the employees.<br>• Compared to my earlier employment outside the village, |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | my quality of life has significantly improved after joining this company.<br>• I am confident that if similar opportunities are provided to other local villagers, their living standards will be improved. |
| 4 | **Mrs. Sandhiya, Thervoy Kandigai Village** | • Although I am not currently employed in the company, I serve as the head of the SMC Parents Teachers Association in my village.<br>• On behalf of the villagers, I raised issues such as shortage of purified drinking water facilities, difficulties faced by 63 school students, absence of proper roads, and accumulation of waste in the surroundings.<br>• The company invited me for discussions, allowed entry with complete adherence to safety protocols, and welcomed me respectfully.<br>• Initially, I was hesitant, but the company patiently heard the issues raised by myself and also accepted the written petition submitted.<br>• The company has assured to provide purified drinking water facilities to the village by the 30th of this month, thereby demonstrating social responsibility.<br>• I sincerely appreciate the company's concern for the community, extend my full support to the company. |
| 5 | **Mr. Sasikumar, Latchi Palavakkam** | • I am currently employed as a plumber at Baettr India Pvt. Ltd.<br>• Previously, while working in Tiruvallur, I had to spend nearly 6 hours daily on commuting, which caused severe hardships and difficulty to me.<br>• Now, with an 8-hour shift at Baettr India, I am also able to undertake additional part-time jobs nearby, thereby increasing my income.<br>• The stable salary has enabled me to provide quality education to my children, and my son has also secured |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | employment in the same company, which is a source of pride for our family.<br>• Without this company, my family would still be facing hardships. Today, it has uplifted our livelihood.<br>• I hope the company's expansion will provide similar benefits to many more families in the nearby village.<br>• I fully extend my support to the company for expansion. |
| 6 | **Mr. Mesak Yesupadham, Advocate, Vadamadurai Village** | • Providing three time food a day to employees is a commendable welfare measure and deserves appreciation to the company.<br>• Children now attend school happily; the company has been providing educational support that even School Management Committees (SMC) and Parent-Teacher Associations (PTA) are unable to offer.<br>• Though agricultural opportunities have reduced due to the establishment of SIPCOT industries, alternative livelihoods of the villagers have emerged through industrial employment, including sanitation work.<br>• Personally, if I were not employed in the judiciary field, I would have preferred to work in this company.<br>• I highlight that just yesterday, 1,500 people in Tamil Nadu and Puducherry registered as a lawyer in Bar Council, wherever the difficulties faced by the public will be addressed by conducting demonstrations immediately for social development.<br>• I humbly request that Environmental Clearance be granted so that the company may expand and provide more employment opportunities. |
| 7 | **Mr. Jeeva, Viduthalai Chiruthaigal Katchi Constituency Secretary** | • I have participated in public hearings in Gummidipoondi for industries located there and voiced concerns about environmental impacts. Based on this experience, I observe that Baettr has employed local villagers and significantly improved their living standards. |

| S.No | Name & Village | Views/Comments |
| --- | --- | --- |
| | | • Although I raised environmental concerns, I acknowledge that Baettr has not caused any major environmental impacts.<br>• Employees' testimonies reflect the company's commitment to worker welfare.<br>• When Honda company shut down in this locality, many local youth lost their jobs. Baettr has created new employment opportunities for them.<br>• Expansion is essential to provide more stable jobs for local youth. Therefore, I request the grant of Environmental Clearance. |
| 8 | **Mr. Prakash, Periyapalayam** | • Although I live in a nearby village, I came to know about this company only while working in Chennai. Later, I became an entrepreneur doing Accounting services to the companies located in SIPCOT.<br>• Initially, I was unaware, but through guidance I secured this opportunity. Many others like me have turned into entrepreneurs.<br>• Establishment of new industries and expansion of existing ones will increase government revenue and taxes.<br>• I fully support the company's expansion and request Environmental Clearance. |
| 9 | **Mr. Venkatesh, NGO** | • A greenbelt covering 33% of the total area must be developed, with priority given to planting Native species such as Pongamia trees to control dust emission.<br>• Out of the 709 new jobs created by the expansion, preference should be given to local people, and local transportation services must be utilized more.<br>• I request that Environmental Clearance be granted for the expansion project of the company. |
| 10 | **Mr. Kalidas, Sulaimeni Village** | • Although residing in a nearby village, I currently work in a private company far away, with 12-hour shifts. The heavy workload and long commute impose severe hardships to |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | me and my family.<br>• Through friends and media, I came to know that Baettr is a growing company with good administration and a focus on employee welfare.<br>• I am eager to work in this company if given the opportunity.<br>• The expansion should provide job opportunities for local villagers, and I am also hopeful of securing employment in the company.<br>• I extend full support for the expansion and request Environmental Clearance. |
| **11** | **Mr. Sunanda Reddy, NGO** | • Unemployment is the greatest social pollution, and industries play a critical role in addressing it.<br>• I therefore urge MoEFCC to grant approval for this project without imposing conditions.<br>• Fruit-bearing and medicinal trees should be planted instead of ordinary trees, and rainwater harvesting systems must be strengthened.<br>• Skill development training must be provided to unemployed youth with government support.<br>• A coordination committee between villagers and the company should be formed for effective CSR activities.<br>• I fully support the company and request unconditional Environmental Clearance. |
| **12** | **Mr. Venugopal, NGO** | • Baettr plays a vital role in supplying products for windmill manufacturing and benefits people without causing pollution.<br>• Insurance coverage must be made mandatory for all employees.<br>• Local people should be given priority in both technical and non-technical employment. |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| | | • Protective gear such as helmets, shoes, safety vests, and ear protection must be provided mandatorily.<br>• Medical camps and RO water facilities should be organized, and the company should support nearby schools, temples and health centers.<br>• A committee comprising villagers and the company must be established to address community requirements.<br>• I extend full support for the expansion and request Environmental Clearance. |
| 13 | **Mr. Subramaniam, NGO** | • Baettr India's contribution to windmill manufacturing is commendable.<br>• Wind energy is renewable, reduces dependence on petrol and diesel, and provides clean, non-polluting energy.<br>• I therefore request that Environmental Clearance be granted for this project. |
| 14 | **Mr. M. Chandrasekar, Sengarai Village** | • He highlighted that drinking water and groundwater in Sengarai are contaminated with chemicals.<br>• Contact with this water causes skin irritation, and it worsens wounds.<br>• Medical reports are available. I therefore request concerned authorities to conduct an on-site inspection and take appropriate action. |
| 15 | **Mrs. Sarasoo, Thervoy Kandigai Village** | • Previously, while commuting for work in Gummidipoondi, I had to wake up at 4:00 a.m., complete household chores and cooking, and under take long travel, which affected my health.<br>• At present, working in Thervoy Kandigai allows me to start my day at 5:00–6:00 a.m., which has improved my health.<br>• The company has made life more comfortable and improved my family's well-being.<br>• I therefore extend my support for the company's expansion. |

| S.No | Name & Village | Views/Comments |
|---|---|---|
| 16 | **Mrs. Shakeela, Palavakkam Village** | • In my previous employment, long working hours created difficulties in managing family responsibilities.<br>• Now, with fixed working hours from 8:00 a.m. to 4:30 p.m., I am able to balance family and work life effectively.<br>• I thank the company for providing this employment opportunity.<br>• More employment opportunities should be created for women and youth; at least 100 more individuals must be employed through this expansion.<br>• I request that Environmental Clearance be granted. |
| 17 | **Mr. Mohan, Perandur Village** | • I have been employed as a sanitation worker for the past three years.<br>• The company gives utmost importance to safety; entry is not permitted without protective clothing and safety devices.<br>• Employees are provided with three time meals daily, along with medical facilities and emergency treatment.<br>• The company is operating effectively, and therefore I extend full support for its expansion. |
| 18 | **Mr. Aravind, Ammampalayam** | • Earlier, when I was employed in Tiruvallur, I experienced health issues and long travel difficulties.<br>• Now, by working in Thervoy Kandigai, my lifestyle has improved.<br>• The company prioritizes safety; no entry is permitted without safety gear.<br>• Employees are provided with three time meals daily and emergency medical support.<br>• I therefore request that Environmental Clearance be granted for the expansion. |

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the Ministry of Environment, Forest and Climate Change (MoEF & CC), Government of India (GOI).

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public Hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Gummidipoondi**

**District Revenue Officer,**
**Tiruvallur District**

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய்கண்டிகை கிராமம், சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள தி/ள்.பேட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்தி திறன் விரிவாக்கத் திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 26.09.2025 அன்று காலை 11:00 மணியளவில் நடைபெற்ற கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்.**

| | |
|---|---|
| திட்டம் : | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய்கண்டிகை கிராமம், சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள தி/ள். பேட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், தனது தற்போதைய வளாகத்திலேயே விற்பனைக்குரிய வார்ப்புப் பொருட்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 27,500 டன் அளவிலிருந்து 95,040 டன் ஆக விரிவாக்கம் செய்வதற்கான திட்டத்தை முன்மொழிந்துள்ளது. |
| இடம் : | திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்கரை கிராமத்தில் அமைந்துள்ள சமுதாய கூடம். |
| தேதி மற்றும் நேரம் : | 26.09.2025– காலை 11:00 மணி |
| தலைமை அதிகாரிகள்: | 1. திரு .C . சுரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் , திருவள்ளூர் மாவட்டம்<br><br>2. திருமதி .G.கஜலட்சுமி, எம்டெக், எம்பிஏ., மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் , தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். |

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய்கண்டிகை கிராமம், சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள தி/ள். பேட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், தனது தற்போதைய தொழிற்சாலை வளாகத்திலேயே விற்பனைக்குரிய வார்ப்புப் பொருட்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 27,500 டன் அளவிலிருந்து 95,040 டன் அளவிற்கு விரிவாக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும், இத்திட்டம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு, 2006 விதிகளின்படி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டியதாகும் எனவும் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுவினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளின் (Terms of Referance)–ன் படி, அந்த நிறுவனத்தால் சுற்றுச்சூழல்

தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. மேலும், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட இருப்பதற்கான அறிவிப்பை, சட்டப்படி தேவையானவாறு, இரண்டு நாளிதழ்களில் – "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (தமிழ்நாடு பதிப்பு)" மற்றும் "தினகரன் (சென்னை பதிப்பு)" – ஆகியவற்றில் 22.08.2025 அன்று வெளியிட்டது. அதன்படி, இன்று 26.09.2025 பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தி/ள். பேட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், திட்டத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் குறித்து பவர் பாயிண்ட் விளக்கக்காட்சி மூலம் விளக்கவுரை வழங்கினார். இவ்விரிவாக்கத் திட்டம், தற்போதைய வளாகத்திலேயே விற்பனைக்குரிய வார்ப்புப் பொருட்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 27,500 டன் அளவிலிருந்து 95,040 டன் அளவிற்கு உயர்த்துவது என்பதைக் குறிக்கிறது. இதற்கிணங்க, தொழிற்சாலை குடில்கள் மற்றும் பிற கட்டிடங்கள் 18,471.8 சதுர மீட்டரில் இருந்து 46,451.1 சதுர மீட்டர் அளவிற்கு விரிவாக்கப்படவுள்ளதாகவும், அடிப்படை ஆய்வுகளின் முடிவுகள் மற்றும் விரிவாக்கத் திட்டத்தால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் சாதகங்களும் தெரிவித்தார்.

கருத்து கூற விரும்பும் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்த பின் தங்களது கருத்துக்களைப் பதிவிடுமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கும்மிடிப்பூண்டி அவர்கள் தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்வைத்த கருத்துகள், கேள்விகள் மற்றும் திட்ட முன்மொழிவாளரின் விளக்கங்கள் கீழே விரிவாக வழங்கப்பட்டுள்ளன.

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| 1. | **திருமதி .தெய்வநிலா, தேர்வாய்கண்டிகை கிராமம்** | • என் கிராமத்திற்கு அருகிலேயே வேலை வாய்ப்பு இருப்பதால், பணிக்கு சென்று வரும் நேரம் மிச்சமாகிறது. மேலும், 8 மணிநேர பணி நேரம் மட்டுமே இருப்பதால், குழந்தைகளை வளர்ப்பதில் செலவிடும் நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்த முடிகிறது.<br>• நிறுவனம் சிறந்த சம்பளத்தின் அடிப்படையில் ஆதரவு அளிக்கிறது, மேலும் அலுவலக நேரத்தில் உணவு வசதியையும் உறுதி செய்கிறது. |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | • நிறுவனம் பாதுகாப்பு மற்றும் அனைத்து சுற்றுச்சூழல் விதிகளுக்கும் இணங்க செயல்படுகிறது.<br>• நிறுவனம் உள்ளூர் மக்களுக்கு மேலும் வேலை வாய்ப்புகளை தொடர்ந்து வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது, இது சமுதாயத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.<br>• இந்நிறுவனத்திற்கு விரிவாக்கம் செய்ய சுற்றுச்சூழல் அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |
| 2. | திருமதி . பாரதி , தேர்வாய்கண்டிகை கிராமம் | • கணவரின் உடல்நிலை காரணமாக அவர் வேலை செய்ய முடியாத நிலையில், இந்நிறுவனத்தில் எனக்கு கிடைத்த வேலை வாய்ப்பு எங்கள் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த உதவுகிறது.<br>• இந்நிறுவனத்தில் வழங்கப்படும் நல்ல ஊதியம் மூலம் வீட்டுச் செலவுகள், கணவரின் மருத்துவ செலவுகள், நான்கு பிள்ளைகளின் கல்வி ஆகியவற்றைத் தடையின்றி மேற்கொள்ள முடிகிறது.<br>• இந்நிறுவனம் அமைந்ததால் கிராம மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை; மாறாக வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளது.<br>• எதிர்காலத்தில் எனது பிள்ளைகளுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறினார். |
| 3. | திரு . திருமுருகன், தேர்வாய்கண்டிகை கிராமம் | • கும்மிடிப்பூண்டியில் முன்பு பணியாற்றிய காலங்களில், காலை 5 மணிக்கே கிளம்பி, இரவு 7–8 மணிக்கே வீடு திரும்ப வேண்டியிருந்தது. இதனால் குடும்பத்துடன் நேரம் செலவிட |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | முடியாமல் சிரமம் ஏற்பட்டது.<br>• தற்போது, சொந்த கிராமத்திலேயே எட்டு மணி நேர பணியில் ஈடுபட்டு வருவதால், திருப்தியும் மகிழ்ச்சியும் அதிகரித்துள்ளது.<br>• சொந்தமாக 25 சென்ட் நிலம் இருப்பதால், வேலை நேரத்திற்குப் பிறகு விவசாயத்தில் ஈடுபட்டு கிடைக்கும் விவசாயப் பொருட்களையும் வருமானத்தையும் குடும்பத்திற்குப் பயன்படுத்தி வருகிறேன் என்றார்.<br>• நிறுவனம், நிலையான வருமானம், தினசரி உணவுச் சலுகை, மேலும் பணியிடத்தில் உடல்நலப் பிரச்சினை ஏற்பட்டால் உடனடி சிகிச்சை உள்ளிட்ட வசதிகளையும் வழங்குகிறது என்று தெரிவித்தார்.<br>• முன்பு வெளியூரில் பணியாற்றிய நிலைமைக்குப் பதிலாக, தற்போது வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டுள்ளது என்றார்.<br>• இதுபோன்று பிற பொதுமக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்தால், அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படும் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்தார். |
| 4. | திருமதி .சந்தியா,<br>தேர்வாய்கண்டிகை கிராமம் | • தற்போது நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்றாலும், கிராமத்தின் SMC பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக செயல்பட்டு வருகிறேன் என்றார்.<br>• கிராம மக்கள் சார்பில் சுத்தமான குடிநீர் பற்றாக்குறை, பள்ளியில் படிக்கும் 63 மாணவர்களின் சிரமங்கள், சரியான பாதை |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | இல்லாமை, குப்பைகள் குவிந்திருக்கும் நிலை போன்ற பிரச்சினைகளை தீர்க்குமாறு நிறுவனத்தை தொடர்பு கொண்டு உதவி கோரியதாகவும் கூறினார்.<br>• இதுகுறித்த விவகாரமாக இந்நிறுவனம் என்னைச் சந்திக்க அழைத்தது. அனைத்து பாதுகாப்பு விதிகளுடனும் உள்ளே அனுமதி அளித்து, மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்றது என்று தெரிவித்தார்.<br>• முதலில் தயக்கத்துடன் இருந்தபோதிலும், நிறுவனம் பிரச்சினைகளை விரிவாகக் கேட்டு, எழுத்து மூலம் அளித்த மனுவை ஏற்றுக்கொண்டது என்றார்.<br>• கிராம மக்களுக்கு RO குடிநீர் வசதி இம்மாதம் 30ஆம் தேதிக்குள் செய்து தருவதாக நிறுவனம் உறுதியளித்து, சமூக பொறுப்பை வெளிப்படுத்தியது என்று தெரிவித்தார். |
| 5. | திரு . சசிகுமார், லட்சி பாலவாக்கம் | • தற்போது தான் பேட்டர் இந்தியா நிறுவனத்தில் பிளம்பராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.<br>• திருவள்ளூர் பகுதியில் முன்பு பணியாற்றிய காலங்களில், தினமும் சுமார் 6 மணி நேரம் பயணத்திற்கே செலவாகி பெரும் சிரமத்திற்கு உள்ளாகினேன் என்று கூறினார்.<br>• தற்போது பேட்டர் இந்தியாவில் 8 மணி நேர பணியுடன், அருகிலுள்ள கூடுதல் வேலைகளிலும் ஈடுபட்டு வருமானத்தை அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.<br>• இந்நிறுவனத்தில் கிடைக்கும் நிலையான ஊதியத்தின் மூலம் தனது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி வழங்க முடிந்துள்ளது; இன்று |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | தனது மகனும் அதே நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்றிருப்பது எங்கள் குடும்பத்திற்குப் பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்தார்.<br>• இந்நிறுவனம் இல்லாமல் இருந்திருந்தால், எங்கள் குடும்பம் இன்று வரை சிரமத்தில் இருந்திருக்கும்; ஆனால் இந்நிறுவனம் எங்கள் குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வந்துள்ளதாகவும், தன்னுடைய குடும்பத்தை போலவே அருகிலுள்ள பிற குடும்பங்களும் முன்னேற்றம் அடைய, இந்நிறுவனம் விரிவடைந்து மேலும் வேலைவாய்ப்புகளை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார். |
| 6. | திரு .மேஷாக்<br>ஏசுபாதம், வடமதுரை கிராமம் | • இந்நிறுவனம் பணியாளர்களுக்கு தினமும் மூன்று வேளை உணவு வழங்கப்படுவது மிகச்சிறந்த நலப்பணியாக கருதப்படுவதால், அதனை பாராட்டுவதாக தெரிவித்தார்.<br>• பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் செல்கின்றனர்; பள்ளி மேலாண்மை குழு (SMC) மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் (PTA) தலைவர்கள் கூட வழங்க முடியாத கல்வி ஆதரவை இந்நிறுவனம் வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.<br>• சிப்காட் தொழிற்சாலைகள் அமைந்ததால் விவசாய வாய்ப்புகள் குறைந்திருந்தாலும், வேலைவாய்ப்புகள் மூலம் மக்களுக்கு புதிய வாழ்வாதாரம் உருவாகியுள்ளது. தூய்மைப் பணியாளர்கள் போன்ற துறைகளிலும் வேலைவாய்ப்புகள் கிடைப்பது முன்னேற்றத்திற்கான செயலாகும் என்றும் தான் நீதித்துறையில் இல்லையெனில், நானும் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | இந்நிறுவனத்தில் பணியாற்ற விரும்பியிருப்பேன் என்று தனது தனிப்பட்ட கருத்தை பகிர்ந்தார்.<br><br>• நேற்று மட்டும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 1500 வழக்கறிஞர்கள் பார் கவுன்சிலில் பதிவு செய்துள்ளதாகவும் எங்கு குறைகள் இருக்கிறதோ அங்கே எங்களை போன்ற புரட்சியாளர்கள் மக்களுக்கு சேவை செய்ய தயாராக இருப்பதாகவும், இந்நிறுவனம் மேலும் விரிவடைந்து மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். |
| 7. | திரு . ஜீவா,<br>விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொகுதி செயலாளர் | • தான் வழக்கறிஞராக பணிபுரிவதாகவும், கும்மிடிப்பூண்டியில் உள்ள தொழிற்சாலைகளின் பொதுக் கூட்டங்களில் பங்கேற்று, சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து கருத்து தெரிவித்து வருவதாகவும் அந்த அனுபவத்தின் அடிப்படையில், பேட்டர் நிறுவனம் அருகிலுள்ள கிராம மக்களை பணியாளர்களாகச் செயல்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.<br><br>• பணியாளர்கள் உரையாற்றிய கருத்துகள், நிறுவனத்தின் நலன்களையும் பணியாளர்களுக்கான அக்கறையையும் தெளிவாக காட்டுகின்றன என்று தெரிவித்தார்.<br><br>• ஹோண்டா நிறுவனம் மூடப்பட்டபோது வேலை இழந்த இப்பகுதி இளைஞர்களுக்கு, பேட்டர் நிறுவனம் புதிய வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது என்பதை தான் அறிந்திருப்பதாக கூறினார். |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| 8. | திரு . பிரகாஷ், பெரியபாளையம் | • தான் அருகில் இருக்கும் கிராமத்தில் வசித்தாலும், இந்த நிறுவனத்தைப் பற்றிய தகவல்கள் தனக்கு சென்னையில் பணியாற்றியபோது தான் தெரிய வந்தது என்றும், அதன் பின்னர், தான் இந்நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் தொழில் முனைவராக சேவைசெய்து வருவதாகவும். ஆரம்பத்தில் நிறுவனம் குறித்து தெரியவில்லை என்றும், பிறரின் வழிகாட்டுதலால் அக்கோன்டிங் சர்வீஸில் தான் வேலைவாய்ப்பை உருவாக்கி கொண்டதாக கூறினார். தன்னைப் போல பல பேர் தன் கிராமத்தில் தொழில் முனைவோராக மாறியுள்ளதாக தெரிவித்தார். புதிய நிறுவனங்கள் அமைதலும், ஏற்கனவே உள்ள நிறுவனங்கள் விரிவடைதலும் காரணமாக அரசாங்கத்திற்கு வருவாய் மற்றும் வரிகள் அதிகரிக்கும். என்றும் கூறினார்.<br>• நிறுவன விரிவாக்கத்திற்கு முழுமையாக ஆதரவு தெரிவித்து, சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். |
| 9. | திரு . வெங்கடேஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர் | • மொத்த பரப்பளவின் 33% பசுமைப் பாட்டை உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக தூசி பரவலைக் கட்டுப்படுத்தும் புங்கை மரங்கள் நடவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.<br>• விரிவாக்கத்தின் மூலம் உருவாகும் 709 பணியிடங்களுக்கு உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும்; மேலும் உள்ளூர் போக்குவரத்தை இந்நிறுவனம் அதிகமாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உள்ளூர் மக்களின் வாழ்வதாரங்களை மேம்படுத்த வழிவகை செய்யவேண்டும் என்றும் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | கேட்டுக்கொண்டார். மேலும், இந்நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதை கேட்டுக்கொண்டார். |
| 10. | திரு . காளிதாஸ், சூளைமேனி கிராமம் | • அருகிலுள்ள கிராமத்தில் வசித்தாலும், தான் தற்போது தொலைவில் உள்ள தனியார் நிறுவனத்தில் 12 மணி நேர ஷிப்ட் முறையில் வேலை செய்து வருவதாகவும். அதிகமான பணிச்சுமையும், பணியிடத்திற்குச் சென்று வருவதற்கான நேரச் செலவும் காரணமாக, தன்னையும் தன் குடும்பத்தினரையும் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்குகிறது என்று தெரிவித்தார்.<br>• நண்பர்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் பேட்டர் நிறுவனம் குறித்து அறிந்ததாகவும். இது வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நிறுவனம் என்றும், பணியாளர்களின் நலன்களை கருதி நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்கும் நிறுவனமென்றும் புரிந்துகொண்டதாகவும். வாய்ப்பு கிடைக்கும் போது இந்நிறுவனத்தில் பணியாற்ற ஆவலுடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.<br>• அருகிலுள்ள கிராம மக்களுக்கு விரிவாக்கத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்; தானும் இந்நிறுவனத்தில் வேலை பெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் தெரிவித்தார். |
| 11. | திரு . சுனந்தாரெட்டி, சுற்றுச்சூழல் ஆர்வலர் | • வேலை இல்லாமையே மிகப் பெரிய சமூக மாசு; அதைத் தீர்க்க தொழில்துறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை தான் வலியுறுத்துவதாக தெரிவித்தார். |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | • எனவே, MoEFCC எந்த நிபந்தனையும் இன்றி இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.<br>• சாதாரண மரங்களை விட பழமரங்கள் மற்றும் மூலிகை மரங்கள் நடவு செய்யப்பட வேண்டும்; மேலும் மழைநீர் சேகரிப்பு முறைகள் சிறப்பாக அமைய வேண்டும்.<br>• வேலைஇல்லா இளைஞர்களுக்கு அரசு உதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.<br>• கிராம மக்கள் மற்றும் நிறுவனம் இணைந்து CSR பணிகளைச் செய்ய ஒரு ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட வேண்டும்.<br>• நிறுவனத்திற்கு முழுமையான ஆதரவை அளித்து, நிபந்தனையற்ற சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். |
| 12. | திரு . வேணுகோபால்,<br>சுற்றுச்சூழல்<br>ஆர்வலர் | • பேட்டர் நிறுவனம் காற்றாலை உற்பத்தியில் முக்கிய பங்காற்றி வருகிறது; மாசு ஏற்படுத்தாமல் மக்களுக்கு பயனளித்து வருவதாக கூறினார்.<br>• ஒவ்வொரு பணியாளருக்கும் காப்பீடு வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.<br>• தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பமற்ற அனைத்து பிரிவுகளிலும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.<br>• பணியாளர்களுக்கு ஹெல்மெட், சேஃப்டி வேயிஸ்ட், காதுக்காப்பு போன்ற பாதுகாப்பு |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | உபகரணங்கள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.<br>• மருத்துவ முகாம்கள் மற்றும் RO தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்; அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் சுகாதார மையங்களுக்கு நிறுவனம் ஆதரவு அளிக்க வேண்டும்.<br>• கிராம மக்களின் தேவைகளை தீர்க்க நிறுவனம் மற்றும் மக்கள் இணைந்து ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.<br>• நிறுவன விரிவாக்கத்திற்கு முழுமையான ஆதரவை தெரிவித்து, சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |
| 13. | திரு . சுப்ரமணியம்,<br>சுற்றுச்சூழல் ஆர்வலர் | • பேட்டர் இந்தியா நிறுவனம் காற்றாலை உற்பத்தியில் முக்கிய பங்காற்றி வருவது பாராட்டத்தக்கது என்று தெரிவித்தார்.<br>• காற்றாலை ஆற்றல் புதுப்பிக்கக்கூடியது; பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சார்பை குறைக்கும்; மாசு ஏற்படுத்தாத தூய்மையான ஆற்றலாகும் என்றும் கூறினார்.<br>• எனவே, இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |
| 14. | திரு . எம்.சந்திரசேகர்,<br>செங்கரை கிராமம் | • செங்கரை கிராமத்தில் குடிநீர் மற்றும் நிலத்தடிநீரில் இரசாயனக் கலப்பு உள்ளதாகக் குறிப்பிட்டார்.<br>• அந்தத் தண்ணீர் உடலுக்கு தொட்டாலே அரிப்பு ஏற்படுகிறது; காயங்களில் படும்போது மேலும் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | அதிக பாதிப்பை உண்டாக்குகிறது என்று கூறினார்.<br>• மருத்துவ அறிக்கைகள் உள்ளன; எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |
| 15. | திருமதி . சரசு,<br>தேர்வாய் கண்டிகை | • முன்னர் வேலைக்காக கும்மிடிப்பூண்டி செல்லும்போது, காலை 4 மணிக்கே எழுந்து வீட்டுவேலைகளும் சமையல் வேலைகளும் செய்து, பெரும் சிரமத்துடன் நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது; இதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டது என்று கூறினார்.<br>• தற்போது தேர்வாய் கண்டிகையில் வேலை செய்து வருவதால், காலை 5–6 மணிக்கு எழுந்தாலே போதுமானதால் உடல்நலம் மேம்பட்டுள்ளது எனவும் மேலும் இந்நிறுவனம் விரிவாக்கம் செய்ய கட்டிடம் கட்ட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார். |
| 16. | திருமதி . ஷகீலா,<br>பாலவாக்கம் கிராமம் | • முந்தைய பணிகளில் கடுமையான வேலை நேரம் காரணமாக, குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்பட்டதாக கூறினார்.<br>• தற்போது தேர்வாய் கிராமத்தில் காலை 8:00 மணி முதல் மாலை 4:30 மணி வரை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பணியாற்றுவதன் மூலம், குடும்பத்தையும் வேலையையும் சமநிலைப்படுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் மேலும் இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டும் பெண்கள் மற்றும் |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | இளைஞர்களுக்கு தொழிற்சாலை விரிவாக்கத்தின்போது குறைந்தது 100 பேருக்காவது வேலைவாய்ப்பு வழங்கிட இந்நிறுவனத்தை கேட்டுக்கொண்டார். |
| 17. | திரு . மோகன்,<br>பேரண்டூர் கிராமம் | • தான் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்நிறுவனத்தில் தூய்மை பணியாளராகப் பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.<br>• இந்நிறுவனத்தில் பாதுகாப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; பாதுகாப்பு உடைகள் இல்லாமல் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.<br>• தினமும் மூன்று வேளை உணவுடன், மருத்துவ வசதி மற்றும் அவசர சிகிச்சை ஆகியனவும் வழங்கப்படுகின்றன.<br>• நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது; எனவே, அதன் விரிவாக்கத்திற்கு நான் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார். |
| 18. | திரு . அரவிந்த்,<br>அம்மாம்பாளையம் | • தான் முன்பு திருவள்ளூரில் வேலை செய்தபோது, உடல்நல சிரமங்களும் நீண்ட பயண சிரமங்களும் ஏற்பட்டதாக கூறினார்.<br>• தற்போது தேர்வாய் கண்டிகையிலேயே இந்நிறுவனத்தில் வேலை செய்வதால், தன் வாழ்க்கை முறை நலமாக உள்ளதாக தெரிவித்தார்.<br>• இந்நிறுவனத்தில் பாதுகாப்பிற்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது; பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை. |

| நபர் | பெயர் மற்றும் ஊர் | கருத்துக்கள் / கோரிக்கைகள் |
|---|---|---|
| | | • தினமும் மூன்று வேளை உணவுடன், அவசர உதவியும் வழங்கப்படுகிறது.<br>• எனவே, நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். |

பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம், திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் NGOs ஆகியோருக்கு நன்றி தெரிவித்து நிறைவுற்றது. மேலும், கூட்டத்தின் நடவடிக்கைகள் (ஒலி மற்றும் காணொளி பதிவுகள்) மற்றும் கூட்டத்தின் மினிட்ஸ் நகல் ஆகியவை இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சகத்துக்கு (MoEF&CC,GOI) அனுப்பப்படும் என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்களின் பட்டியல், கூட்டத்தின் ஒலி மற்றும் காணொளி பதிவுகள், மேடையில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மற்றும் கூட்டத்தின் புகைப்படங்கள் ஆகியவை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
கும்மிடிப்பூண்டி.

மாவட்ட வருவாய் அலுவலர் ,
திருவள்ளூர் மாவட்டம்.